செ.வெ.எண்-43 நாள்-24.10.2020

# அரியலூர் மாவட்டத்தில் நீர் ஆதாரத்தை பெருக்கும் வகையில் ஏரிகளில் நடைபெற்று வரும் சீரமைப்பு பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.த.ரத்னா, இஆப., அவர்கள் நேரில் ஆய்வு செய்தார்கள்.

அரியலூர் மாவட்டம், அரியலூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகள் மற்றும் உள்ளாட்சி துறை அமைப்பின் கட்டுப்பாட்டில் மேலப்பழூர், ஒட்டக்கோவில், தவுத்தாய்குளம், கருவிடைச்சேரி ஆகிய ஊராட்சிகளில் உள்ள ஏரி மற்றும் குட்டைகளில் கரைகள் பலப்படுத்தும் பணி மற்றும் தூர்வாரும் பணியினை மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.த.ரத்னா, இ.ஆ.ப.,** அவர்கள் இன்று (24.10.2020) நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள்.

**இந்த ஆய்வின்போது, மாவட்ட ஆட்சியர் அவர்கள் தெரிவித்ததாவது,**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் நீர் ஆதாரத்தை உயர்த்தும் வகையில் சிறப்பு திட்டமான குடிமராமத்து திட்டம் தமிழகம் முழுவதும் சிறபான முறையில் செயல்படுத்தப்பட்டு, பொதுப்பணித்துறை மற்றும் உள்ளாட்சி துறையின் கட்டுப்பாட்டில் உள்ள ஏரிகளில் குடிமராமத்து பணிகள் மேற்கொள்ளப்பட்டு, மழை நீர் சேகரிக்கப்பட்டு வருகிறது. இதன் மூலம் நிலத்தடி நீர் மட்டம் உயர்வதற்கும், விவசாயிகளுக்கு தேவையான பாசன வசதி கிடைக்க உறுதி செய்யப்படுகிறது.

மேலும், அரியலூர் நகராட்சிக்குட்பட்ட மக்களுக்கு ஒரு நாளைக்கு 86 லிட்டர் ஒரு நபருக்கு வீதம் 2.56 எம்.எல்.டி குடிநீர் கொள்ளிடம் கூட்டுகுடிநீர் திட்டத்தின் மூலமாகவும் கிடைக்கப்பெறும் நிலத்தடி நீர் மூலமாகவும் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. கோடைக்காலத்தில் அரியலூர் நகர மக்களுக்கு தேவையான குடிநீர் தங்குதடையின்றி கிடைக்க பெறும் வகையிலும், நிலத்தடி நீர் மட்டத்தை உயர்த்தும் வகையிலும், அரியலூர் நகராட்சி பகுதிகளில் அமைந்துள்ள செட்டி ஏரி, பள்ளேரி, அய்யப்பனேரி, வன்னாங்குட்டை, பட்டுநூல்கார ஏரி, மாரியம்மன் குட்டை, காலனி குட்டை, பல்லேரி குட்டை, இருசுகுட்டை, சின்னகுட்டை, நாகம்மாள் சாவடி, கொம்புகுழி குட்டை, வசன்குட்டை ஆகிய 13 ஏரிகளில் நகராட்சி சார்பில் சீரமைப்பு பணிகள் போர்கால அடிப்படையில் நடைபெற்று வருகிறது. இச்சீரமைப்பு பணிகள் மூலம் ஏரிகளில் உள்ள ஆக்கிரமிப்புகள் முழுவதுமாக அகற்றபெற்று கரைகள் பலப்படுத்தப்பட்டு, கரைகளை சுற்றிலும் மரங்கள் நடப்படவுள்ளன. இந்த ஏரிகளில் தேவையற்ற குப்பைகளை கொட்டுவதை தடுக்கப்படுவதுடன், சாக்கடை நீர் கலப்பதும் தடுக்கப்படவுள்ளது. மேலும், அரியலூர் நகராட்சிக்கு கொள்ளிடம் கூட்டு குடிநீர் திட்டத்தின்கீழ் வழங்கப்பட்டு வரும் குடிநீர் சீரான வகையில் விநியோகம் செய்யும் வகையில் அடிப்படை கட்டமைப்பு திட்டத்தின்கீழ் 25 கிலோமீட்டர் நீளத்திற்கு ரூ.15.17 கோடி மதிப்பீட்டில் குடிநீர்குழாய்கள் சீரமைக்கப்பட்டு வருகின்றன.

வரக்கூடிய மழைக்காலத்திற்கு முன்பாக இப்பணிகள் அனைத்தும் முடிக்கப்பட்டு, மழைநீர் சேகரிக்கும் வகையில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும், கிராமப்புற ஊராட்சிகளிலுள்ள ஏரிகளிலும் சீரமைப்பு பணிகள் நடைபெற்று வருகின்றன. இதன் ஒரு பகுதியாக அனைத்து ஏரிகளிலும் கரைகள் பலப்படுத்தப்பட்டு, வரத்துவாய்க்கால் மற்றும் பாசன வாய்க்கால் சீரமைக்கப்பட்டு, கரைகள் முழுவதும் தேசிய ஊரக வேலைவாய்ப்பு திட்டத்தின்கீழ் மரக்கன்றுகள் நடுவதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இப்பணிகள் மூலமாக அரியலூர் மாவட்ட மக்களுக்கு தேவையான குடிநீர் மற்றும் பாசன வசதி கிடைக்கபெறுவது உறுதி செய்யப்படும்.

எனவே, பொதுமக்கள் அனைவரும் அனைத்திற்கும் ஆதாரமாக விளங்கும் மழை நீரினை சேகரிக்கும் வகையிலும், ஏரி மற்றும் குட்டைகளில் தேவையற்ற குப்பைகளை கொட்டுவதை தவிர்த்து, பாதுகாப்பான குடிநீர் கிடைக்க பெறுவதற்கு பொதுமக்கள் அனைவரும் முழு ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.த.ரத்னா, இஆப.,** அவர்கள் தெரிவித்தார்கள்.

இந்த ஆய்வின்போது, மாவட்ட வருவாய் அலுவலர் இரா.ஜெய்னுலாப்தீன், திட்ட இயக்குநர் (ஊரக வளர்ச்சி முகமை) சு.சுந்தர்ராஜன், உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) பழனிசாமி, நகராட்சி ஆணையர் குமரன், பொதுப்பணித்துறை உதவி செயற்பொறியாளர் (நீ.வ.ஆ.து) வேல்முருகன், வட்டாட்சியர் சந்திரசேகரன், நகராட்சி பொறியாளர் மனோகரன் மற்றும் அலுவலர்கள் உட்பட பலர் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**